(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

இல. 17.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2019 சனவரி 11 வெள்ளிக்கிழமை, பி.ப. 1.30 மணிக்கு**

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்ற சபை முதல்வர்,— சட்டவாக்க நிலையியற் குழு,— 113 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், சட்டவாக்க நிலையியற் குழுவானது பிரதி சபாநாயகரைத் தவிசாளராகவும், குழுக்களின் பிரதித் தவிசாளர் மற்றும் தெரிவுக் குழுவினால் பெயர் குறிப்பிடப்படும் மேலும் பதின்நான்கு (14) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

2.

பாராளுமன்ற சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு,— 115 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் மற்றும் 2019 சனவரி 8 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2019 சனவரி 10 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் மற்றும் தெரிவுக் குழுவினால் பெயர் குறிப்பிடப்படும் மேலும் பதினேழு (17) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

3.

பாராளுமன்ற சபை முதல்வர்,— பொது மனுக்கள் பற்றிய குழு,— 122 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், பொது மனுக்கள் பற்றிய குழுவானது தெரிவுக் குழுவினால் பெயர் குறிப்பிடப்படும் பத்தொன்பது (19) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

4.

பாராளுமன்ற சபை முதல்வர்,— பின்வரிசைக் குழு,— 126(2) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், பின்வரிசைக் குழுவானது அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான், தெரிவுக் குழுவினால் பெயர் குறிப்பிடப்படும் அரசாங்கக் கட்சியின் எட்டு (08) பின்வரிசை உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சியின் எட்டு (08) பின்வரிசை உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் துருக்கிக் குடியரசுக்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 13 ஆம் திகதிய 2079/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.09.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.